முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 25.02.2026.அ.வ.எண்.343/2022, வா.சா.3. மணியாள், க/பெ. விஸ்வநாதன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வாதிகள் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சண்முகத்திற்கு வாரிசு சான்றிதழ் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். சண்முகத்தின் அப்பா , அம்மா பெயர் என்ன என்றால் முருகேசன், பழனியம்மாள் ஆகும். அவர்கள் எப்போது இறந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சண்முகம் இறப்பதற்கு முன்பே அவரது பெற்றோர்கள் இறந்துவிட்டார்கள். வளர்மதி வாதிகளுக்கு என்ன உறவு முறை என்றால் சண்முகத்தின் மகள் ஆவார். வசந்திக்கு வளர்மதி மகள் ஆவார்.

2) வாதிகளின் குடும்ப விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியாது என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் விவரங்கள் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் நான் தான் சொன்னேன்.

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி